# மே – 16 – புதன்
## புனித நெப்போமுசேன்

**"இனி மேல் நீங்கள் என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை" - திபணி20 : 37**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 20 : 28– 38

அந்நாட்களில் பவுல் நபேசு சபையின் மூப்பர்களிடம் கூறியது : "தமது சொந்த இரத்தத்தால் தமதாக்கிக் கொண்ட கடவுளின் திருச்சபையை மேய்ப்பதற்கு தூய ஆவியார் உங்களைக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியுள்ளதால் உங்களையும், மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக்கொள்ளுங்கள். உங்களை விட்டு நான் சென்ற பின்பு கொடிய ஓநாய்கள் உங்களுக்குள் நுழையும் என்பது எனக்குத் தெரியம். அவை மந்தையைத் தப்பவிடாதவாறு தாக்கும். உங்களிடமிருந்து சிலர் தோன்றி சீடர்களையும் தம்மிடம் திசைதிருப்புமளவுக்கு உண்மையைத் திரித்துக் கூறுவர். எனவே விழிப்பாயிருங்கள் மூன்று ஆண்டு காலமாக அல்லும் பகலும் இடைவிடாது கண்ணீரோடு நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தி வந்ததை நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள். இப்போதும் நான் உங்களைக் கடவுளிடம் ஒப்படைக்கிறேன் அவரது அருள் வார்த்தைக்கும் கட்டுப்படுவீர்களாக! அவ்வார்த்தை வளர்ச்சியையும் தூயோர் அனைவருக்குமுரிய உரிமைப்பேற்றையும் உங்களுக்குத் தரவல்லது. எவருடைய பொன்னுக்கோ வெள்ளிக்கோ ஆடைக்கோ நான் ஆசைப்பட்டதில்லை. என்னுடைய தேவைகளுக்காகவும் என்னோடிருந்தவர்களுடைய தேவைகளுக்காகவும் இந்த என் கைகளே உழைத்தன என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாறு பாடுபட்டு உழைத்து நலிவுற்றோர்க்குத் துணை நிற்க வேண்டுமென்று அனைத்திலும் உங்களுக்கு வழிகாட்டினேன். அதோடு, பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூருங்கள் என்றும் கூறினேன்." இவற்றைச் சொன்னபின் அவர் முழந்தாள் படியிட்டு அவர்களெல்லாரோடும் சேர்ந்து இறைவனிடம் வேண்டினார். பின் எல்லாரும் பவுலைக் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கதறி அழுதனர். "இனி மேல் நீங்கள் என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை" என்று அவர் கூறியது அவர்களுக்கு மிகுந்த வேதனை அளித்தது. பிறகு அவர்கள் கப்பல்வரைக்கும் சென்று அவரை வழியனுப்பி வைத்தனர்.

**பதில்பாடல் :** உலகிலுள்ள அரசர்களே கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்.

## நற்செய்தி : யோவான் 17 : 11 - 19

அக்காலத்தில் இயேசு வானத்தை அண்ணாந்து பாரத்து வேண்டியது: தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம்பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்.நான் அவர்களோடு இருந்தபோது நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்து வந்தேன் நன்கு பாதுகாத்தேன். அவர்களுள் எவரும் அழிவுறவில்லை. மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறும் வண்ணம் அழிவுக்குரியவன் மட்டுமே அழிவுற்றான்."இப்போது உம்மிடம் வருகிறேன். என் மகிழ்ச்சி அவர்களுள் நிறைவாக இருக்கும்படி நான் உலகில் இருக்கும்போதே இதைச் சொல்கிறேன். உம்வார்த்தையை நான் அவர்களுக்கு அறிவித்தேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல், அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆதலால் உலகம் அவர்களை வெறுக்கிறது.அவர்களை உலகிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று நான் வேண்டவில்லை. தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன்.நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல.உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை.நீர் என்னை உலகிற்கு அனுப்பியதுபோல, நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகிறேன்.அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்.

**தியானம்:** இன்றைய நாளுக்கான யோவான் நற்செய்தியில் இயேசு கடவுளை நோக்கி எழுப்பிய நீண்டதொரு மன்றாட்டில் (யோவா 17:1-28). இயேசு கடவுளைப் போற்றிச் சிறப்பாகத் தம் சீடர்களுக்காக இறைவனை மன்றாடுகிறார். தந்தையோடு தமக்கு இருக்கின்ற ஒன்றிப்பு சீடர்கள் நடுவிலும் நிலவவேண்டுமென வேண்டுகிறார் (யோவா 17:11). உலகை விட்டுப் பிரிந்துசெல்கின்ற வேளையிலும் இயேசு உலகின் மீட்புக்காக வேண்டுகிறார். உலகத்தை மீட்பதற்காகவே இயேசு இவ்வுலகிற்குத் தந்தையால் அனுப்பப்பட்டார். தம் பணியை நிறைவேற்றிவிட்டுத் தந்தையிடம் செல்கின்ற இயேசு அப்பணியைத் தொடர்வதற்கான பொறுப்பைத் தம் சீடர்களிடம் ஒப்படைக்கிறார். இயேசு இவ்வுலகில் இருந்து நற்செய்தியை அறிவித்தது போல அவருடைய சீடர்களும் நற்செய்தியைத் தொடர்ந்து அறிவிக்கவேண்டும். அப்பணியை ஆற்றும்போது அவர்களுக்குத் துணையாக இயேசுவும் அவர் வழங்குகின்ற தூய ஆவியும் இருப்பார்கள். சீடர்கள் ஆற்ற வேண்டிய பணி இயேசு ஆற்றிய பணியே என்பதை வலியுறுத்தும் விதத்தில் இயேசு, "தந்தையே, நீர் என்னை உலகிற்கு அனுப்பியதுபோல, நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகிறேன்" என்று கூறி மன்றாடுகின்றார். இந்த மன்றாட்டில் முதலில் இயேசு தந்தையால் அனுப்பப்பட்டதனைக் குறிப்பிடுகிறார். கடவுளின் ஆட்சி இவ்வுலகில் வந்துகொண்டிருக்கிறது என்னும் நற்செய்தியை மக்களுக்கு அறிவித்து, அவர்களை இறைவாழ்வில் பங்குகொள்ளச் செய்வதே இயேசு ஆற்றவந்த பணியின் நோக்கம் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதனை நாம் அவதானிக்கலாம். இரண்டாவதாக, இயேசு தம் சீடர்களை உலகிற்கு அனுப்புவது குறிப்பிடப்படுகிறது. இந்த இரு "அனுப்புதல்களும்" ஒன்றோடொன்று இணைபிரியாமல் பிணைந்துள்ளதை நாம் கருதவேண்டும். இயேசுவில் நம்பிக்கை வைத்து வாழ்கின்ற சீடர்கள் தம் சொந்தப் பெயரால் அல்லது வல்லமையால் பணி செய்வதில்லை. மாறாக, தன்னை உருவாக்கிய இயேசுவின் பெயராலேயே பணி செய்கிறனர் என்பது நிரூபணமாகின்றது. திருச்சபை வழியாக இயேசுவே அப்பணியை ஆற்றுகிறார். எனவே, நாம் ஆற்றுகின்ற நற்செய்திப்பணி வெற்றியடைவதற்கு வழிகாட்டுபவர் இயேசுவே. நாம் கடவுளின் கைகளில் அவருடைய கருவிகளாக இருந்து பணியாற்றிட அழைக்கப்படுகிறோம் எனப்படும் செய்தியை இன்றைய நற்செய்தி எமக்குத் தருகிறது.